

தமிழ்நாடு அரசு

மூன்றாம் வகுப்பு

பருவம் - II

தமிழ்

ENGLISH

பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

தமிழ்நாடு அரசு

முதல் பதிப்பு - 2026

(புதிய பாடத்திட்டத்தின்கீழ்
வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

விற்பனைக்கு அன்று

ஓர் அழைப்பு உங்கள் வாழ்க்கையை மாற்றும் (18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான 24×7 கட்டணமில்லாத் தொலைபேசி எண்கள்)

குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர் போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?

CHILD LINE 1098 NIGHT & DAY

அழையுங்கள் குழந்தை உதவி எண் 1098

உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்

மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு அல்லது அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?
தேர்வு மற்றும் உயர்கல்விக்கு வழிகாட்டுதல் தேவையா?

14417 கல்வித் தகவல் மையம்

அழையுங்கள் 14417

உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்

உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
© SCERT 2026

அச்சிட்டு வெளியிடுவோர்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

அணிந்துரை

குழந்தைப்பருவம் இயல்பாகவே வியப்புக்குரியதாகவும், எல்லையற்ற ஆர்வத்துடனும், கற்பனை ஆற்றல் உடையதாகவும், எதையும் கண்டறியும் ஆற்றலுடனும் நிரம்பி இருக்கும். இந்த இயல்பே கற்றல் அனுபவத்திற்கான முதல்படி. இதன் அடிப்படையில் மகிழ்ச்சியாகவும் பொருளுணர்ந்தும் ஈடுபாட்டுடனும் கற்பதற்குரிய சூழ்நிலையை உருவாக்கும் நோக்கில் 1முதல் 3ஆம் வகுப்புவரையிலான பாடநூல்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மாநிலக் கல்விக் கொள்கை 2025-இன் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டுள்ள இந்தப் பாடநூல்கள், மாநிலத்தின் அடிப்படைக் கல்வியை வலுப்படுத்துவதில் முக்கியப்படியாக விளங்குகின்றன. **மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சரின்** தொலைநோக்குப் பார்வையும் வழிகாட்டுதலும், இக்கல்விக் கொள்கையின் முக்கியச் சிறப்புகளான குழந்தைமையக் கற்றல், திறன் அடிப்படையிலான கற்றல் மற்றும் உள்ளடங்கிய கற்றல் போன்றவை இப்பாடநூல்களில் வெளிப்படுவதை உறுதி செய்துள்ளன.

பள்ளிக் கல்வித்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர், பாடப்பொருள் அறிவுடன் 21ஆம் நூற்றாண்டுத் திறன்களை ஒருங்கிணைத்து இப்பாடநூல்களைக் கதைவழிக் கற்றல் அனுபவங்களாக உருவாக்குவதில் அளப்பரிய பங்காற்றியுள்ளார்.

மேலும், திறன் அடிப்படையிலான கற்றல் அணுகுமுறையானது கலைத்திட்டம் மற்றும் மதிப்பீட்டை, மனப்பாடம் செய்து கற்றல் என்ற நிலையிலிருந்து மாற்றி, ஆழமான கருத்தியல் புரிதல் மற்றும் பொருளுணர்ந்து பயன்படுத்துதல் என்ற நிலைக்கு மேம்படுத்தியுள்ளது. பண்புநலன்களை வளர்த்தெடுக்கும் விழுமியக் கல்வி, வாழ்வியல் திறன்கள், கலை மற்றும் உடல் இயக்கத் திறன்களோடு ஒருங்கிணைந்து குழந்தையின் முழுமையான வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.

கலைத்திட்ட உயர்மட்ட வல்லுநர் குழுவின் உறுப்பினர்கள், கலைத்திட்ட வடிவமைப்புக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தங்களின் நுட்பமான அறிவு மற்றும் கல்வி அனுபவத்தின் மூலம் இப்பாடநூல்களை வடிவமைத்துச் செம்மைப்படுத்துவதில் தொடர்ச்சியான வழிகாட்டுதலை வழங்கியுள்ளனர். இப்பாடநூலில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வியாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் பங்களிப்பும் இதில் அடங்கும்.

இத்தொடக்கநிலையில், கல்வியானது குழந்தைகளுக்கு வலுவான கற்றல் அடித்தளத்தை அமைப்பதோடு அவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் துணையாக நிற்க வேண்டும். இதைக் கருத்தில் கொண்டு இப்பாடநூல்கள், குழந்தைகள் பங்கேற்று, பொருளுணர்ந்து ஆழமாகக் கற்கும்வகையில் கீழ்க்காண் கூறுகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன.

- தன்னம்பிக்கையுடன் தம் கருத்தை வெளிப்படுத்த உதவும் பேசுதல் மற்றும் கேட்டலுக்கான வாய்ப்புகள்.
- தருக்கரீதியான சிந்தனை மற்றும் கருத்தியல் புரிதலை வலுப்படுத்தும் கற்றல் செயல்பாடுகள்.
- படித்தல் மற்றும் எழுதுதல் திறன் பெறுவதற்காகப் பாடத்துடன் ஒருங்கிணைத்து அளிக்கப்பட்டுள்ள பயிற்சிகள்.
- நுண்தசை மற்றும் உடலியக்கத் திறன்களை வளர்ப்பதற்கான வரைதல், வண்ணம் தீட்டுதல், வரியொற்றி எழுதுதல் மற்றும் விளையாட்டுச் செயல்பாடுகள்.
- தாமாகக் கற்பதற்கும் சுயமாகச் சிந்திப்பதற்குமான எளிய வாய்ப்புகள்.

விழுமியங்களையும் வாழ்வியல் திறன்களையும் பாடநூல்களில் ஒருங்கிணைத்து வழங்குவதன் மூலம் பரிவு, ஒத்துழைப்பு, பொறுப்புணர்வு மற்றும் தன்னம்பிக்கை போன்ற பண்புகளைக் குழந்தைகள் வளர்த்துக்கொள்ள உதவுகின்றன.

கற்றலானது மனப்பாடம் செய்வதைத் தாண்டி, புரிதல் மற்றும் பயன்பாட்டை நோக்கிய ஒரு திறன் அடிப்படையிலான அணுகுமுறையால் வழிநடத்தப்படுகிறது. மதிப்பீடானது கற்றல் செயல்முறையிலேயே ஒன்றிணைக்கப்பட்டு, தொடர்ச்சியானதாக, பொருளுள்ளதாக, கற்றலுக்குத் துணைபுரிவதாக அமைந்துள்ளது.

இப்பாடநூல்கள், கற்றல் பயணத்தின் வழித்துணை. ஆராயவும், சிந்திக்கவும், தன்னை வெளிப்படுத்தவும் குழந்தைகளுக்கு இவை தளம் அமைத்துக் கொடுக்கின்றன. ஒவ்வொரு குழந்தையும் மகிழ்ச்சியுடன் கற்பதையும், தன்னம்பிக்கையுடன் வளர்வதையும் வலுவான எதிர்காலத்திற்கு அடித்தளமிடுவதையும் உறுதிசெய்யும் ஒட்டுமொத்தப் பொறுப்புணர்வின் வெளிப்பாடாக இப்பாடநூல்கள் விளங்குகின்றன. **"உள்ளடங்கிய, சமவாய்ப்பு மற்றும் எதிர்கால ஆயத்தத்தை உறுதிசெய்யும் மறுஉருவாக்கம் செய்யப்பட்ட கல்வி"** என்ற தொலைநோக்குப் பார்வையை இப்பாடநூல்கள் முன்னெடுத்துச் செல்கின்றன.

இயக்குநர்
மாநிலக் கல்வியியல்
ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
தமிழ்நாடு

இந்திய அரசமைப்பு

முகப்புரை

இந்திய மக்களாகிய நாம், இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்,

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல், நீதி;

எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,

சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை;

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை

ஆகியவற்றை எய்திடச் செய்யவும்;

அவர்கள் அனைவரிடையேயும்

தனி மனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,

ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்

உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்;

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

- *மகாகவி இரவீந்திரநாத தாகூர்.*

நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய். நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது. அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன. இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே!

உனக்கு வெற்றி! வெற்றி! வெற்றி!



தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணீயம்' பெ. சுந்தரனார்.



தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும். பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!



தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.



உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

முகவுரை

> *தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! – இன்பத்*
> *தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர் தந்த தேன்! –* பாவேந்தர் பாரதிதாசன்.

தமிழ்நாட்டின் தனித்துவப் பண்பாடு, மொழி மற்றும் சமூக மரபை முன்னிறுத்தி, தமிழ்நாடு மாநிலக் கல்விக் கொள்கை 2025 உருவாக்கப்பட்டுள்ளது. இது குழந்தைகளுக்கான கட்டாயத் தேவையாக, முக்கியமான ஒற்றைக்கூறாக அடிப்படை எழுத்தறிவைக் குறிப்பிடுகிறது; தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குழந்தையும் வயதுக்கு ஏற்ற கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் உள்ளிட்ட வாழ்நாள் முழுமைக்குமான அடிப்படை மொழித்திறன்கள் பெறுவதை வலியுறுத்துகிறது. அனைத்துப் பாடங்களையும் கற்பதற்கான அடித்தளமாக மொழிப்பாடம் அமைவதால் குழந்தைகளின் உள்ளார்ந்த திறன்களைக் கண்டறியவும், மேம்படுத்தவும், சமூகத்தோடு இயைந்து வாழவும் வழிகாட்டும் வகையில் இப்பாடநூல் கட்டமைக்கப்பட்டுள்ளது.

துறுதுறுப்பும் எதையும் தேடித் துருவி அறிந்துகொள்ளும் குழந்தைகளின் இயல்புணர்ந்து அவர்களுக்குப் பிடித்தமான/நெருக்கமான மற்றும் அறிமுகமானவற்றைக் கொண்டே இந்நூலில் பாடங்கள், பயிற்சிகள், மொழி விளையாட்டுகள் போன்றவை பின்வருமாறு அளிக்கப்பட்டுள்ளன.



பாடக்கட்டமைப்பு

ஒவ்வொரு பாடமும் சிந்தனையைத் தூண்டும் வினாவுடன் தொடங்குகிறது. அந்த வினாவிற்கான விடைகளைக் குழந்தைகள் தாமாகவே தேடி அறியும் அணுகுமுறையில் பாடம் கட்டமைக்கப்பட்டுள்ளது. இதனால், மீளப்படித்தலும் பொருளுணர் திறனும் வலுப்பெறுகின்றன. குழந்தைகள் பெற வேண்டிய கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய அடிப்படை மொழித்திறன்களுக்கான பாடங்கள் பின்வருமாறு பாடநூலுள் அளிக்கப்பட்டுள்ளன.

பாடங்கள்

எங்கள் சுற்றுலா – முதல் பருவத்தில் பெற்ற மொழிப்பாடத் திறன்களை நினைவுகூர்தல். 1

புதிய விளையாட்டு – உரையாடலைப் படித்துப் புரிந்துகொள்ளவும் உருவாக்கவும் உதவும் பாடம். 2

அலகு 1

கேட்டது என்ன? தந்தது என்ன? – புதிர்ப் பகுதிகளைக் கேட்டும், படித்தும், புரிந்துகொள்ளவும், தாமே உருவாக்கவும் உதவும் பாடம். 3

நல்லவை அறிவோம் – பாடல் வரிகள் வெளிப்படுத்தும் விழுமியங்களைப் புரிந்து பின்பற்ற உதவும் பாடம். 4

அலகு 2

அடிப்படைத் திறன்களை வளர்க்கும் பயிற்சிச் செயல்பாடுகள்

கேட்டல், பேசுதல்

கேட்டதைப் புரிந்துகொண்டு தம் மொழிநடையில் பேசுதல்

படித்தல்

பொருள்புரிந்தும் விரைந்தும் ஆர்வத்துடன் தேடிப் படித்தல்

எழுதுதல்

எழுத்துவழியே படைப்பாற்றலை வெளிப்படுத்துதல்

பாடநூலில் கற்றவற்றை உறுதிப்படுத்தும் மதிப்பீடு

- கற்றவற்றை மீண்டும் நினைவுகூரும் பகுதி – திரும்பிப் பார்க்கலாம்
- கற்றல் விளைவுகளை மதிப்பிடும் பகுதி (சிந்தித்து விடையளித்தல், கதை கூறுதல், பாடல் பாடுதல்) – கற்றல் பயணம்
- குழந்தைகள் தாம் கற்றதை அறியும் பகுதி – நான் கற்றவை
- ஒவ்வோர் அலகிற்குமான வளரறி மதிப்பீடு – நானே செய்வேன்

ஆசிரியர் கையேடு



ஒலிவடிவில் பாடங்கள், காணொலி வடிவில் அசைவூட்டக் காட்சிகள், மின்னுரு பாடப்பொருள் (Digital content), மின்னூல் (e – Book), உள்ளடங்கிய மின்னூல் (i – Book) குழந்தைகளின் பாடம் சார்ந்த ஆர்வத்தைக் கூர்தீட்டும் வகையில் அளிக்கப்பட்டுள்ளன. இவை, தன்னம்பிக்கையுடன் மொழியைப் பேச, படிக்க, எழுத, படைக்க வழிகாட்டுவன.



நிறைவாக, ஒவ்வொரு குழந்தையும் வாழ்நாள் முழுமைக்குமான வலுவான, நிரந்தரமான கல்வி அடித்தளத்தைப் பெறுவதோடு, எந்தவொரு குழந்தையும் விடுபடாமல் சமவாய்ப்பினைப் பெற்று அடிப்படை எழுத்தறிவு என்னும் இலக்கினை அடைவதையே இப்பாடநூல் எதிர்நோக்குகிறது.

பொருளடக்கம்

அலகு	தலைப்பு	பக்க எண்
1	1. எங்கள் சுற்றுலா	1
	2. புதிய விளையாட்டு	13
2	3. கேட்டது என்ன? தந்தது என்ன?	37
	4. நல்லவை அறிவோம்	52

மின்னூல் UA6CH

உள்ளடங்கிய மின்னூல் TK6TO

ஆசிரியர் கையேடு QY7VO

மதிப்பீடு IV5QY



அலகு 1

1. எங்கள் சுற்றுலா



நாங்கள் சுற்றுலா செல்வதற்கு அடையாள அட்டை உருவாக்கினோம். நீங்களும் உருவாக்குங்கள்.

NH2AC

அடையாள அட்டை



பெயர் : வெண்பா.பா
வகுப்பு : மூன்றாம் வகுப்பு
பள்ளி : ஊ. ஒ. தொ. பள்ளி, செம்பூர்.

குருதி வகை : A^{+ve}
தாய் பெயர் : சுசீலா
தந்தை பெயர் : பாபு
அலைபேசி எண் : 98765 43210

முகவரி

எண் 10, பாரதி தெரு, செம்பூர்,

வந்தவாசி வட்டம்,

திருவண்ணாமலை மாவட்டம்.

அஞ்சல் குறியீட்டு எண் : 604 408.



அடையாள அட்டை

பெயர் : _____

வகுப்பு : _____

பள்ளி : _____

குருதி வகை : _____

தாய் பெயர் : _____

தந்தை பெயர் : _____

அலைபேசி எண் : _____

முகவரி

_____

_____

_____

_____



நாங்கள் பொருட்காட்சிக்குச் செல்கிறோம். நீங்கள் செல்ல விரும்பும் இடம் எது? காரணம் கூறுங்கள்.

கடற்கரை



வணிக வளாகம்



மலைப்பகுதி



வயல்வெளி



பொருட்காட்சி



அருவி





பேருந்து வரத் தாமதமாகிறது. அது வரும்வரை நாங்கள் விளையாடுகிறோம். நீங்களும் விளையாடுங்கள்.



துணைக்கருவி : உயிர் எழுத்துகள் கொண்ட அட்டைப்பெட்டி.



இரு குழுவாகப் பிரிய வேண்டும். ஒவ்வொரு குழுவிலும் ஒருவர் எழுத்து அட்டையை எடுக்க வேண்டும்.



எடுத்த எழுத்துக்கு ஏற்பக் குதிக்க வேண்டும் (குறில் – ஒருமுறை, நெடில் – இருமுறை). பின்பு, அவ்வெழுத்தில் தொடங்கும் சொல் ஒன்றைக் கரும்பலகையில் எழுத வேண்டும். இவ்வாறு தொடர்ந்து விளையாடலாம்.



கரும்பலகையில் உள்ள சொற்களை எழுதுங்கள்.

குறில்	நெடில்



இதே விளையாட்டை உயிர்மெய் எழுத்துகளுக்கும் விளையாடலாம்.

பயணம் தொடங்கியது. பயணத்தில் நாங்கள் பார்த்து மகிழ்ந்தவற்றைப் பாடினோம். நீங்களும் பாடுங்கள்.

பாம்... பாம்...

பாம் பாம்... பேருந்தில் வருகிறோம்.
பாட்டுப் பாடிச் சிரிக்கிறோம்.
சிலுசிலு... காற்றில் வருகிறோம்.
ஊரைச் சுற்றிப் பார்க்கிறோம்.

பாம் பாம்... பாம் பாம்... சிலுசிலு... சிலுசிலு...
பாம் பாம்... பாம் பாம்... சிலுசிலு... சிலுசிலு...

துறுதுறு... அணிலே வருகிறோம்.
கொய்யாப் பழங்கள் தருகிறோம்.
குடுகுடு... முயலே வருகிறோம்.
வெள்ளரிப் பிஞ்சைத் தருகிறோம்.

துறுதுறு... துறுதுறு... குடுகுடு... குடுகுடு...
துறுதுறு... துறுதுறு... குடுகுடு... குடுகுடு...

குக்கூ... குயிலே வருகிறோம்.
உன்னுடன் சேர்ந்து பாடுகிறோம்.
தக்தக்... மயிலே வருகிறோம்.
உன்னைப் போல ஆடுகிறோம்.

குக்கூ... குக்கூ... தக்தக்... தக்தக்...
குக்கூ... குக்கூ... தக்தக்... தக்தக்...

சலசல... அருவியே வருகிறோம்.
உன் ஓசைகேட்டு மகிழ்கிறோம்.
குளுகுளு... மலையே வருகிறோம்.
உன்னைப் பார்த்து வியக்கிறோம்.

சலசல... சலசல... குளு குளு... குளு குளு
சலசல... சலசல... குளு குளு... குளு குளு

நாங்கள் பழங்கள் எடுத்து வந்தோம். அதன் பெயர்களைக் கொண்டு சொற்கோபுரம் அமையுங்கள்.


பப்பாளி


வாழை


மாதுளை


மா


கொய்யா


இலந்தை


பலாச்சுளை


அத்தி


நாவல்


அன்னாசி

கோமாளி மாற்றி மாற்றிப் பேசினார். நாங்கள் சரியாகச் சொன்னோம். நீங்களும் சொல்லுங்கள்.

வானம் கீழே, பூமி மேலே உள்ளது.

வானம் மேலே, பூமி கீழே உள்ளது.



1. யானை சிறியது. பூனை பெரியது.

2. நீரில் பந்து மூழ்கும். நீரில் கல் மிதக்கும்.

3. பனிக்கூழ் சூடானது. தேநீர் குளிர்ச்சியானது.

4. தக்காளிச்செடி உயரமானது. பனைமரம் குட்டையானது.

நாங்கள் சிறுவர் திரைப்படம் பார்த்தோம். நீங்களும் படக்காட்சிகளைப் பாருங்கள். கதையைக் கூறுங்கள். தலைப்பை எழுதுங்கள்.



தொடுதிரையில் சொற்களைச் சேர்த்து, புதிய சொற்கள் உருவாக்கினோம். நீங்களும் உருவாக்குங்கள்.

வான்கோழி
நெருப்புக்கோழி
காட்டுக்கோழி
நாட்டுக்கோழி
பண்ணைக்கோழி

கோழிமுட்டை
கோழிக்கூண்டு
கோழிக்குஞ்சு
கோழிக்கொண்டை
கோழிப்பண்ணை

_____பூ

_____பூ

பூ_____

பூ_____

_____மீன்

_____மீன்

மீன்_____

மீன்_____

நாங்கள் ஓவிய அரங்கிற்குச் சென்றோம். பிடித்ததை வரைந்து காட்சிப்படுத்தினோம். நீங்களும் வரையுங்கள்.



புத்தகக் கண்காட்சிக்குச் சென்றோம். படக்கதையைப் பார்த்தோம். படக்காட்சியை எழுத உதவுங்கள்.



நண்பர்கள் கட்டிய வீடு



குரங்கு, பன்றி இரண்டும் விளையாடின.
மழை வருவதுபோல் இருந்தது.
என்ன செய்யலாம் எனச் சிந்தித்தன.



குரங்கு, பன்றி இரண்டும் விளையாடின.
மழை வருவதுபோல் இருந்தது.
என்ன செய்யலாம் எனச் சிந்தித்தன.
பன்றி, குச்சிகளை நட்டது.



குரங்கு, பன்றி இரண்டும் விளையாடின.
மழை வருவதுபோல் இருந்தது.
என்ன செய்யலாம் எனச் சிந்தித்தன.
பன்றி, குச்சிகளை நட்டது.





சுற்றுலா முடிந்து திரும்பினோம். எங்களை அழைத்துச் செல்லும் உறவினர்களை வட்டமிட்டுக் கண்டுபிடியுங்கள்.



பெ	மா	ம்	அ	ம
ரி	மா	சி	த்	தி
ய	க	மு	தை	தா
ப்	அ	க்	கா	த்
பா	ட்	டி	து	தா

அம்மா

அத்தை



சுற்றுலா பற்றிய எங்கள் அனுபவங்களைப் படியுங்கள். அவற்றை வரிசைப்படுத்தி எழுதுங்கள்.



பயண அனுபவம்

படம் வரைந்தோம்.

கோமாளியைப் பார்த்தோம்.

பாடல் பாடினோம்.

வீடு திரும்பினோம்.

பழங்கள் தின்றோம்.



பொருட்காட்சியின் வரைபடம் கிடைத்தது. நாங்கள் சென்றுவந்த பாதையை வரைபடத்தில் சரிபார்த்தோம். நீங்கள் வரைபடத்தைப் பார்த்து, உரிய அறிவிப்புகளை எழுதுங்கள்.







அறிவிப்புகளில்...

பூக்களுடன் தொடர்புடையது : _____

வாகனத்துடன் தொடர்புடையது : _____

'செய்' என்று சொல்வது	'செய்யாதே' என்று சொல்வது

மகிழ் பக்கம்



தொடர்புடையது எது? கண்டுபிடித்து ஒரே வண்ணமிடலாம்.











வரையலாம்.







நான் கற்றவை



1. சிறு தொடர்களைப் பொருள் உணர்ந்து படிக்க முடியும். ☐ ☆☆☆
2. விதிமுறைகளைக் கேட்டுப் பின்பற்ற முடியும். ☐ ☆☆☆
3. தன்னைப் பற்றிய விவரங்களை எழுத முடியும். ☐ ☆☆☆



கற்றுக்கொண்ட திறனுக்கு ✓ செய்ய வேண்டும்.
பெற்ற அடைவுக்கு ஏற்ப வண்ணமிட வேண்டும்.

2. புதிய விளையாட்டு



JD5AS

அமீர், பள்ளியில் நடந்தவற்றை அம்மாவிடம் கூறுவான். அவன் பேசப் பேச அம்மா கேட்டுக் கொண்டிருப்பார். ஆனால், சில நாள்களாக ஒரு மாற்றம். ஓவியா அப்படிச் செய்தாள்... ஓவியாவுக்கு இதுவும் தெரியும்... என்று நாள்தோறும் புதிய தோழி ஓவியாவைப் பற்றி வியப்புடன் பேசிக்கொண்டு இருந்தான்.

அமீர் வியந்து பேசும் அளவிற்கு ஓவியா என்ன செய்திருப்பாள்?

குறிப்பு

எல்லோரும் கூறும் விடைகள் கதைக்குள் உள்ளனவா? படித்துப் பார்க்கலாமா?





விளையாடும்போது ஓவியாவின் குரல் மட்டும் ஒலித்துக்கொண்டே இருக்கும். விளையாடி முடித்தனர். ஓவியாவிடம் ஓடிவந்தான் அமீர்.



நண்பர்கள் விளையாடும்போது ஒலிகளைக் கேட்டே ஓவியா மகிழ்வாள். அவளால் பார்க்க முடியாது. அவள் உணர்வதை அப்படியே உரக்கச் சொல்வாள். அவளும் இணைந்து விளையாடுவது போலவே நினைப்பாள்.





வீட்டிலும் ஓவியாவின் குரல், அமீரின் மனத்தினுள் ஒலித்துக்கொண்டே இருந்தது. "நீ சற்று வேகமாக ஓடியிருந்தால் அந்தப் பந்தைப் பிடித்து இருக்கலாம்."




ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்...
அமீர்
ஓ, சரியாகக் கண்டுபிடித்தாய்!
நாளையும் ஒரு புதிய விளையாட்டை விளையாடலாம்.
ம்...சரி!
என்னை எப்படிக் கண்டுபிடித்தாய்?
நீ குரலை எப்படி மாற்றினாலும் கண்டுபிடிப்பேன்.
ஆனால், நீ குரல் எழுப்புவதற்கு முன்பே கண்டுபிடித்தேன்.
ஆ, அதெப்படி!



சொற்களைக் கொண்டு கதைக்குப் புதிய தலைப்புகளை உருவாக்குக.



கலந்துரையாடலாம்.



- கதையில் உங்களுக்குப் பிடித்தது என்ன? ஏன்?
- ஓவியா செய்த செயல்களில் உங்களுக்கு வியப்பைத் தந்தவை எவை?
- ஓவியாவைப் போன்ற நண்பர் வகுப்பில் இருந்தால், நாம் செய்ய வேண்டியவை யாவை?

செய்கை விளையாட்டு



- நடப்பேன்... நடப்பேன்...
  இடிக்காமல் நடப்பேன்...
  என்று சொல்வேன்;
  கைகளை விரித்து வேகமாக நடப்பேன்.



செய்து பழகலாம்

1. பின்தொடர்ந்து படிக்க.



- பாடத்தைப் படிக்கக் கேட்டும் , ஒலிப்பதிவைக் கேட்டும் பின்தொடர்ந்து படிக்கலாம்.
- பாடத்தை ஒருவர் படிக்கத் தொடங்கி இடையில் நிறுத்த, ஒவ்வொருவராகத் தொடர்ந்து படிக்கலாம்.

XL5VS

2. கதையில் பிடித்த சொற்களை எழுதுக.



1			6
2			7
3			8
4			9
5			10



தாம் எழுதிய அதே சொற்களை அதிக எண்ணிக்கையில் எழுதியது யார் என்பதைக் குழுவினருடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

குறிப்பு

அதிகமான சொற்களை ஒன்றுபோல் எழுதிய நண்பர் :

ஒன்றுபோல் எழுதிய சொற்களின் எண்ணிக்கை :

3. பாடத்தில் அடிக்கோடிட்டு எழுதுக.



1. **'பந்து'** என்ற சொல் ஐந்துமுறை இடம்பெற்றுள்ளது.

   சரி ☐ தவறு ☐

2. கதையில் இடம்பெற்றுள்ள உணவு: _____

3. **'பழைய'** என்பதன் எதிர்ச்சொல் இடம்பெற்ற தொடர்:

   _____

குறிப்பு

உரிய விடைகளைப் பாடத்தில் கண்டுபிடித்து அடிக்கோடிட வேண்டும்.

4. படித்துப் பார்க்க.



அறிந்து படிக்க.

வேகமாக	-	விரைவாக
உரக்க	-	சத்தமாக
இணைந்து	-	சேர்ந்து
நாளை	-	அடுத்த நாள்
சாப்பிடுவாள்	-	உண்பாள்

பிரித்தும் சேர்த்தும் படிக்க.

புயல் + போல	புயல்போல
தொட்டு + விட்டாள்	தொட்டுவிட்டாள்
கண்டு + பிடித்தேன்	கண்டுபிடித்தேன்
விளையாடும் + போது	விளையாடும்போது

5. பேசலாம்.

என் நண்பர்களிடம்
பார்த்து வியந்தவை...





குறிப்பு

நண்பர்களிடம் பார்த்து வியந்த பண்பு/செயல் குறித்துப் பேச வேண்டும்.

6. படித்து விடை எழுதுக.



படித்தல் பலகை

புயல்	ஓவியா	போகலாம்	சிந்தாமல்
சற்று	தெரியும்	ஓடுகிறான்	நடக்கிறாள்
நேரம்	இடிக்காமல்	வலதுபக்கம்	விளையாடலாம்
இல்லை	மாறிவிட்டாய்	நினைப்பாள்	இவையெல்லாம்

ஓ, நன்றாக இருக்கும்! எப்படிக் கண்டுபிடித்தாய்?

1. ஓர் எழுத்தை நீக்கக் கிடைக்கும் சொல்

   புதையல் - _____

2. ஓர் எழுத்தை மாற்றக் கிடைக்கும் சொல்

   வீரம் - _____

3. எதிர்ச்சொல்

   உண்டு × _____ தெரியாது × _____

4. கண்டுபிடிப்பதைக் குறிக்கும் தொடர் :

   _____

விரைந்து படிப்பேன்; வண்ணமிடுவேன்.

7. பாடச்சுருக்கம் – படிக்க; விடையளிக்க.



புதிய விளையாட்டு

ஓவியாவும் அமீரும் நண்பர்கள்.

இருவரும் விளையாடும் இடத்திற்குச் சென்றனர்.

அங்கு ஓவியா ஒலிகளைக் கவனித்தாள்.

அவர்கள் விளையாடுவதை விவரித்தாள்.

நன்கு விளையாடக் குறிப்புகள் கொடுத்தாள்.

அமீர், அவள் செயலைக் கண்டு வியந்தான்.

அவளிடம் இருந்து நல்ல பண்புகளைக் கற்றான்.

ஓவியாவையும் விளையாட்டில் சேர்க்க நினைத்தான்.

கண்டுபிடி! கண்டுபிடி! விளையாட்டை உருவாக்கினான்.

ஓவியாவும் சேர்ந்து விளையாடினாள்.

நண்பர்கள் அனைவரும் மகிழ்ந்தனர்.



படிக்க எடுத்துக்கொண்ட நேரம்

1. ⏲ __ : __ 2. ⏲ __ : __ 3. ⏲ __ : __

குறிப்பு

விரைவாகப் படித்து, ஒவ்வொரு முறையும் படித்த நேரத்தைக் குறிக்க வேண்டும்.

1. அமீர், ஓவியாவைப் பார்த்து வியக்கக் காரணம்:

அ) வரைவாள் ☐ ஆ) உற்றுக் கவனிப்பாள் ☐ இ) பாடுவாள் ☐

2. அமீர் உருவாக்கிய புதிய விளையாட்டு எது?

_____

8. சொல்வதை எழுதுக.



குறிப்பு

படித்தல் பலகையில் உள்ள சொற்கள், தொடர்களைச் சொல்லக்கேட்டு எழுத வேண்டும்.

9. தொடரைப் படிக்க: விடையைக் கண்டுபிடித்து எழுதுக.



நான் கதைப் புத்தகம் படித்தேன்.

1. கரும்பை விரும்பிக் கடி
2. மாடிக்கு ஏற உதவும் _____
3. விளையாட்டின் பெயர்_____
4. தாத்தா கையில் இருப்பது _____
5. இனிப்பான பொருள் _____
6. தமிழ் மாதத்தின் பெயர் _____

10. தொடர்ந்து எழுதுக.

என்ன வண்ணம்?

எனக்கு வரையப் பிடிக்கும்.
தக்காளி ஒன்று வரைந்தேன்.
சிவப்பு வண்ணம் தீட்டினேன்.

எனக்கு வரையப் பிடிக்கும்.
கொக்கு ஒன்று வரைந்தேன்.
வெள்ளை வண்ணம் தீட்டினேன்.

_____

_____

_____

_____

_____

_____



11. கேட்டு விடை கூறுக.

PS3RN

நகுல் குறிப்பேடு வாங்கக் கடைக்குப் புறப்பட்டான். செல்லும் வழியில் தோழி மரியாவைச் சந்தித்தான். இதை உன்னிடம் காட்டத்தான் வந்தேன் என்றாள் மரியா. அவள் கொடுத்த குறிப்பேட்டைத் திறந்தான். அது நூலினால் தைத்து, உருவாக்கப்பட்டு இருந்தது. "நீயா செய்தாய்?" என்றான் வியப்புடன். "ஆமாம், பழைய குறிப்பேட்டில் எழுதாத பக்கங்களைக் கிழித்தேன்; அண்ணனின் உதவியுடன் சேர்த்துத் தைத்தேன்" என்றாள் மரியா. அப்படிச் செய்தால் எழுதாத பக்கங்கள் வீணாகாது என்றாள். "என்னிடமும் நிறைய எழுதாத பக்கங்கள் கொண்ட குறிப்பேடுகள் இருக்கின்றன. நானும் குறிப்பேடு செய்வேன்" என்றான் நகுல். அதன் பிறகு குறிப்பேடு, அழிப்பான், எழுதுகோல் போன்ற பொருள்களை முழுமையாகப் பயன்படுத்த முடிவு செய்தான்.

மரியா, புதிய குறிப்பேட்டை எவ்வாறு உருவாக்கினாள்? உருவாக்கிய காரணம் என்ன?

12. சிந்தித்து விடையளிக்க.

மகிழன், மரக்கிளையை ஆட்டினான். அதிலிருந்து தண்ணீர் சொட்டியது. மாடியிலிருந்த அம்மா அழைத்தார். "நான் நனைந்த துணிகளை மீண்டும் உலர வைக்கிறேன். எனக்கு உதவுகிறாயா?" என்றார். மகிழன் அங்கே சென்று துணிகளை எடுத்துக் கொடுக்க, அம்மா, கொடியில் உலர்த்தினார்.

துணிகளை மீண்டும் உலர வைக்கக் காரணம்:

அ) அன்று மழை பெய்திருந்தது. ☐

ஆ) அன்று மழை பெய்யவில்லை. ☐

இ) அன்று மழை பெய்து கொண்டிருந்தது. ☐

13. படித்ததில் பிடித்தது. (கதைப்புத்தகம் / செய்தித்தாள்)

குறிப்பு

படித்த கதையின் தலைப்பு / கதை மாந்தர் / இடம் போன்றவற்றை எழுதலாம்.

14. படித்து விடை எழுதுக.



முத்தழகியும் இராணியும் அலைகளைப் பின்தொடர்ந்து இங்கும் அங்கும் ஓடினர். நண்டுகள் சின்ன சின்ன வளைகளில் ஒளிந்து விளையாடின. கரையோரத்தில் பல வண்ணச் சிப்பிகள் கிடந்தன. இருவரும் அவற்றைச் சேகரித்தனர். மணல்வீடு கட்டினர்; சிப்பிகளை ஒட்டினர். அலை வந்து மோதி, மணல்வீட்டைக் கலைத்தது. அலையோடு செல்லமாகச் சண்டையிட்டனர். அப்போது, முத்தழகியின் அப்பா வலையைத் தோளில் சுமந்துகொண்டு வந்தார். "அப்பா, நிறைய மீன்களோடு வாங்க" என்றாள் முத்தழகி. அப்பா சிரித்துக்கொண்டே தலையசைத்தார். அப்பா படகில் ஏறிப் புறப்பட்டார். முத்தழகியும் இராணியும் மகிழ்வோடு கையசைத்தனர். பெரிய அலையில் படகு ஏறி இறங்கியது.

1. முத்தழகியும் இராணியும் விளையாடிய இடம் எது?

அ) ஏரிக்கரை ☐ ஆ) குளக்கரை ☐ இ) கடற்கரை ☐

2. சரியா? தவறா? ✓ செய்க.

"அப்பா, நிறைய சிப்பிகளோடு வாங்க" என்றாள் முத்தழகி. சரி ☐ தவறு ☐

3. நிரப்புக.

மணல்வீட்டைக் கலைத்தது _____

4. முத்தழகியும் இராணியும் அலைகளோடு சண்டையிடக் காரணம் என்ன?

_____

15. பின்பற்றி எழுதுக.

அமீர் : என் தோழியின் பெயர் ஓவியா. அவளிடமிருந்து,

- சிந்தாமல் சோறு சாப்பிடுவதைக் கற்றுக்கொண்டேன்.
- இடித்துக்கொள்ளாமல் நடப்பதைக் கற்றுக்கொண்டேன்.
- கவனமாக இருப்பதைக் கற்றுக்கொண்டேன்.



_____

_____

_____

16. உயர்திணை, அஃறிணை அறிவோம்.



பாடத்தில் உள்ள பெயர்களை எடுத்து எழுதுக.

பெயர்களை வகைப்படுத்தி எழுதுக.

மனிதர்கள்	விலங்குகள்/ பொருள்கள்
அமீர்	பந்து

- மனிதர்களைக் குறிக்கும் பெயர்கள் உயர்திணைப் பெயர்கள்.
- மனிதர்கள் அல்லாதவற்றைக் குறிப்பன அஃறிணைப் பெயர்கள்.

படத்தைப் பார்த்து உயர்திணை, அஃறிணைப் பெயர்களைக் கூறுக.



உயர்திணைப் பெயருக்கு வட்டமிடுக; அஃறிணைப் பெயருக்கு அடிக்கோடிடுக.

- குடை பிடித்த பாட்டி.
- கொய்யா தின்ற அணில்.
- பூனை அருகில் நாய்.
- செல்வி கையில் மாம்பழம்.
- நளன் பார்த்த வானம்.
- பம்பரம் விளையாடிய சிறுவர்கள்.

17. பேசலாம்; எழுதலாம்.



உணவு கொண்டு வரவில்லை.
பகிர்ந்து உண்ணலாம்.

நடுவில் ஆடுவது என் தோழி.
அழகாக ஆடுகிறாள்.

குறிப்பு

படத்தை உற்றுநோக்கி வினாக்களை உருவாக்கி நண்பர்களிடம் கேட்டு மகிழலாம்.



களைப்பாக இருக்கிறதே!

இந்தா, தண்ணீர் குடி.

வேடம் எப்படி உள்ளது?

சிறப்பாக உள்ளது.

குறிப்பு

உரையாடலைப் படித்து உரிய இடத்தில் எடுத்து எழுத வேண்டும்.

18. படைப்பு நேரம்.





- படத்திலுள்ளவை பேசிக்கொண்டால்...
  படத்தில் எவை? என்ன பேசியிருக்கும்?
  நண்பர்களுடன் உரையாடலாம்.



19. சொல்லிப் பழகுக.



- நண்பன் தந்த நாவல் பழம்
  நாவில் இனிக்கும் நல்ல பழம்
- மரத்தில் இருக்குது கரிக்குருவி
  வந்து அமர்ந்தது புதுக்குருவி

20. செயல்திட்டம் – எங்கள் விளையாட்டு.



- ஓவியாவைப் போன்று உதவி தேவைப்படும் நண்பர்கள் இருப்பார்கள். அவர்களோடு சேர்ந்து விளையாட விளையாட்டுகளை உருவாக்குங்கள். பகிர்ந்து கொள்ளுங்கள்.



உருவாக்கிய விளையாட்டுகளை இடைவேளை நேரங்களில் விளையாடி மகிழுங்கள்.

21. பகிர்வு நேரம்.



- பாடத்தில், பயிற்சிகளில் பிடித்தவற்றைப் பகிரலாம்.
- படித்த தகவல்கள்/கதை குறித்துப் பகிரலாம்.
- தான் தெரிந்துகொள்ள வேண்டும் என நினைப்பதைப் பற்றித் தயக்கமின்றி வினாக்கள் கேட்டுக் கலந்துரையாடலாம்.

22. நீங்கள் என்ன செய்வீர்கள்? ✓ குறியிடுக. காரணம் கூறுக.

1. உங்களிடம் இல்லாத ஒரு திறமை உங்கள் நண்பரிடம் இருக்கிறது.

அ) அவரைப் பாராட்டுவேன். ☐
ஆ) நானும் கற்றுக்கொள்வேன். ☐
இ) மகிழ்வேன். ☐

2. நண்பர்களுடன் சேர்ந்து விளையாட வேண்டும். எத்தகைய விளையாட்டைத் தேர்ந்தெடுப்பீர்கள்?

அ) அனைவருக்கும் தெரிந்த விளையாட்டு. ☐
ஆ) எனக்குப் பிடித்த விளையாட்டு. ☐
இ) எல்லோரும் கலந்துகொள்ளும் விளையாட்டு. ☐

குறிப்பு

விழுமியம் / வாழ்வியல் திறன்களைப் பெறுவதற்கேற்பக் கலந்துரையாட வேண்டும்.

கற்றல் பயணம்



படத்திற்குரிய உரையாடலைக் கோடிட்டு இணைக்க.



1. நாம் நண்பர்கள்.
2. அழிப்பேன்...
3. அழிக்காதே...
4. பிழையை அழித்து, உனக்கு உதவிதானே செய்கிறது.







நான் கற்றவை





1. உரையாடலைப் புரிந்துகொண்டு தன் கருத்தை வெளிப்படுத்த முடியும். ☐ ☆ ☆ ☆
2. படக்கதையைப் படித்துப் புரிந்துகொள்ள முடியும். ☐ ☆ ☆ ☆
3. உயர்திணை, அஃறிணைப் பெயர்களை அறிந்து படிக்க முடியும். ☐ ☆ ☆ ☆

குறிப்பு

கற்றுக்கொண்ட திறனுக்கு ✓ செய்ய வேண்டும்.
பெற்ற அடைவுக்கு ஏற்ப வண்ணமிட வேண்டும்.

திரும்பிப் பார்க்கலாம்





கதையைப் படியுங்கள்; பிடித்த தலைப்பை எழுதுங்கள்.

மன்னித்துவிடு *எது மகிழ்ச்சி?* *அதற்கும் வலிக்கும்*
இத்தனை பேரா! *நண்பனுக்கு என்ன ஆயிற்று?* *காட்டைச் சுற்றலாம்*

NA2RC



சொற்களை உருவாக்கி எழுதுங்கள்.



1. பூங்கா - பூனை சங்கு காகம்
2. அருவி - _____ _____ _____
3. படகு - _____ _____ _____

அடுத்து என்ன நடந்திருக்கும்? கதையைத் தொடர்ந்து கூறுங்கள்.



தேர்ந்தெடுத்து எழுதுங்கள்.


மருத்துவர்


குதிரை


ஓட்டுநர்


ஆலமரம்


வீடு


மீனா

உயர்திணை			
அஃறிணை			



நானும் படிப்பேன்; வண்ணமிடுவேன்



னு து ரு யு மு பு

நு ளு வு லு கு ணு

�னு சு ழு ஙு று டு



உணவு	கழுகு	பருந்து	எலும்பு
கதவு	தள்ளு	கங்காரு	சிவப்பு
நுங்கு	புயல்	கற்கண்டு	இராணுவம்

சிட்டு
சிறிய சிட்டு
பறக்கும் சிறிய சிட்டு
வானில் பறக்கும் சிறிய சிட்டு



புலி
பாயும் புலி
காட்டில் பாயும் புலி
அடர்ந்த காட்டில் பாயும் புலி



முயல் முயல் குட்டிமுயல்.
அடுப்பு அடுப்பு எரிவாயு அடுப்பு.
குரங்கு குரங்கு சுட்டிக்குரங்கு.
முறுக்கு முறுக்கு அரிசிமுறுக்கு.



தும்பி வானில் பறந்தது.
குச்சி காய்ந்து விழுந்தது.
துண்டு வாங்கி வந்தான்.
கரும்பில் எறும்பு ஏறியது.











நானும் படிப்பேன்: வண்ணமிடுவேன்



வூ நூ மூ ரூ யூ லூ

றூ ளூ கூ பூ னூ தூ

டூ ஙூ ஞூ மூ ணூ சூ



மூடி	தூண்	பூச்சி	மூங்கில்
தூரம்	நூலகம்	வல்லூறு	குண்டூசி
உள்ளூர்	கடலூர்	கூழாங்கல்	கூட்டல்



பூ

வண்ணப் பூ

அழகிய வண்ணப் பூ

மலர்ந்த அழகிய வண்ணப் பூ

கூழாங்கல்

ஆற்றில் கூழாங்கல்

நீண்ட ஆற்றில் கூழாங்கல்

ஓடும் நீண்ட ஆற்றில் கூழாங்கல்



பூச்சி பூச்சி கரப்பான்பூச்சி.
தூரல் தூரல் சிறுதூரல்.
பூங்கா பூங்கா சிறுவர்பூங்கா.
மூங்கில் மூங்கில் காட்டுமூங்கில்.



தூக்கணாங்குருவி பார்.
வானில் பறந்த வானூர்தி.
நூறு புத்தகங்கள் உள்ளன.
சூரியகாந்தி வயலில் பூத்தது.









நானே செய்வேன்



1. கேட்டு விடை கூறுக.

வருணும் அனுவும் தோட்டத்தில் மகிழ்ச்சியாக விளையாடினர். அப்போது, ஓர் அழகான பட்டாம்பூச்சி பறந்து வந்தது. அந்தப் பட்டாம்பூச்சியை அருகில் சென்று பார்க்க இருவரும் ஓடினர். பட்டாம்பூச்சியும் பறந்து பறந்து ஒவ்வொரு இடமாக மாறி மாறி அமர்ந்தது. திடீரென்று அது மறைந்துவிட்டது. இருவரும் சுற்றிப் பார்த்தனர். பட்டாம்பூச்சி எங்கே போனது? என்று சிந்தித்தனர். சிறிது நேரத்தில் செம்பருத்திப் பூவிலிருந்து பறந்தது. பூவின் வண்ணமும் பட்டாம்பூச்சியின் வண்ணமும் ஒன்றாக இருந்தது. இதனைக்கண்டு இருவரும் சிரித்தனர்.

பட்டாம்பூச்சி செம்பருத்திப்பூவில் இருந்ததை இருவராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஏன்?

2. படித்துக்காட்டுக.

சோறு
புதிய
நின்று
நேரம்
உணவு

பக்கம்
தெரியும்
சுற்றுலா
கண்டுபிடி
முகவரி

ஓடுகிறான்
உறவினர்
சாப்பிடுகிறாள்
சொல்கிறாள்
செம்பருத்தி

மணல்வீடு கட்டினர்.
அனைவரும் மகிழ்ந்தனர்.
சிவப்பு வண்ணம் தீட்டுவேன்.

குறிப்பு

நிறுத்தாமல் எத்தனை சொற்களைப் படிக்க முடிகிறது? நண்பர்களுடன் போட்டியிட்டுப் படிக்கலாம்.

3. படித்து விடை எழுதுக.

1. வரைந்தேன் – ஓரெழுத்தை நீக்கக் கிடைக்கும் சொல்லை ✓ செய்க.

அ) வளர்ந்தேன் ☐ ஆ) வந்தேன் ☐ இ) வரைந்து ☐

2. உரிய பெயரை வட்டமிடுக.

அஃறிணை – அ) மாறன் ஆ) கவிதா இ) முயல்

உயர்திணை - அ) மேசை ஆ) தாத்தா இ) தென்னைமரம்

3. விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.

அமீர் : இன்று 'கண்டுபிடி! கண்டுபிடி! விளையாட்டு' விளையாடலாமா?

நண்பர்கள் : அது என்ன விளையாட்டு?

அமீர் : திரும்பி நின்று ஒலி எழுப்பியவரைக் கண்டுபிடிக்கலாம். ஓவியாவும் நம்முடன் விளையாடுவாள்.

கண்டுபிடி! கண்டுபிடி! விளையாட்டில் _____

அ) ஓவியா கலந்துகொள்ள முடியும்.

ஆ) ஓவியா கலந்துகொள்ள முடியாது.

இ) யாரும் கலந்துகொள்ள முடியாது.

4. தொடர்ந்து எழுதுக.



பொம்மை

சின்ன சின்ன பொம்மை.

கண்ணைச் சிமிட்டும் பொம்மை.

_____

_____

எனக்குப் பிடித்த பொம்மை.

மகிழ் பக்கம்



இரண்டிற்கும் தொடர்புடையதைத் தேர்ந்தெடுத்து வரைவோம்.















செய்து மகிழலாம்.



அலகு 2

3. கேட்டது என்ன? தந்தது என்ன?



ஒரு காட்டில் முயல், அணில், கரடி மூன்றும் நண்பர்களாக இருந்தன. அவை மற்ற விலங்குகளிடம் நன்றாகத்தான் பேசிக்கொண்டு இருந்தன. ஆனால், சில நாள்களாக எதையும் நேரிடையாகப் பேசுவதில்லை. புதிர் போன்று பேசத் தொடங்கிவிட்டன. கடையில் பொருளை வாங்கும்போதும் புதிராகவே பேசின.

EC8VS

அப்படி அவை புதிராகப் பேசக் காரணம் என்னவாக இருக்கும்?

குறிப்பு

எல்லோரும் கூறும் விடைகள் கதைக்குள் உள்ளனவா? படித்துப் பார்க்கலாமா?

அணில், கரடி இரண்டும் சந்தைக்குப் புறப்பட்டன. கரடி அலைபேசியில் முயலை அழைத்தது.



தாடி வைத்த தாத்தா வீட்டில்,
கூடுகட்டி வாழலாம்,
தாவிப் பிடித்துத் தொங்கலாம்,
ஊஞ்சல் நாமும் ஆடலாம் – இதற்கான விடையைக் கண்டுபிடி!
அந்த இடத்தில்தான் நிற்கிறோம். நீ எப்போது வருவாய்?



பந்து என்பதில் நடு எழுத்தை மாற்று. அத்தனை மணிக்கு வந்து விடுகிறேன்.

முயல் குறிப்பிட்ட நேரத்தில் வந்தது. மூன்றும் சந்தைக்குச் சென்றன.



காய்கறிக் கடை

அரையில் ஓர் எழுத்தைச் சேர்க்கக் கிடைப்பதையும்
அரையில் ஓர் எழுத்தை மாற்றக் கிடைப்பதையும் தாருங்கள்.

ஓ, புதிர் போடுகிறாயா? விடையைக் கண்டுபிடித்தேன்.
இதோ தருகிறேன்.

விலை என்ன?

அவற்றின் விலை, 'இருப்பது' என்பதில் ஓர் எழுத்தை நீக்கினால் கிடைக்கும்.



மயில் என்னென்ன கொடுத்திருக்கும்? அணில் எவ்வளவு கொடுத்திருக்கும்?

பழக் கடை

முதல் எழுத்து பல்லில் உள்ளது; சொல்லில் இல்லை. இரண்டாம் எழுத்து கலாவில் உள்ளது; கனாவில் இல்லை. அந்தப் பழத்தைத் தாருங்கள்.

புரியவில்லையே?

மயில், குரங்கின் காதில் ஏதோ சொல்லியது. குரங்கு, பழத்தை எடுத்துக் கொடுத்தது.



விலை என்ன?

முதல் எழுத்து நூலில் உள்ளது; பாலில் இல்லை. இரண்டாவது எழுத்து ஆறு என்பதில் உள்ளது; ஆமை என்பதில் இல்லை அவ்வளவுதான்.

அட, நீங்களுமா?

குரங்கு என்ன கொடுத்திருக்கும்? முயல் எவ்வளவு கொடுத்திருக்கும்?

தின்பண்டக் கடை

வட்டம் – எண்ணெய் – ஓட்டை. இவற்றுடன் தொடர்புடைய மூன்று கொடுங்கள்.

பூரியா? அட, ஓட்டையை மறந்துவிட்டேனே! இப்போது கண்டுபிடித்தேன். இதோ தருகிறேன்.

எவ்வளவு?

தண்ணீர் – இருகரை – வளைவு. இதற்கான விடை என்ன? அவ்வளவு தந்தால் போதும்.



காகம் என்ன கொடுத்திருக்கும்? கரடி எவ்வளவு கொடுத்திருக்கும்?

புதிர்கள் உங்களுக்குப் பிடித்து இருந்தனவா?

நன்றாக இருந்தன. ஆனால், ஏன் புதிராகப் பேசினீர்கள் என்றுதான் புரியவில்லை.

காட்டில் உள்ள சுட்டிகளுக்குத் '**தேன்கூடு**' என்னும் புத்தகம் உருவாக்கப் போகிறோம்.

மாதம் ஒரு புதிய புத்தகம்.

அந்தப் புத்தகத்திற்காகப் புதிர்கள் எழுதுகிறோம். அதற்கான பயிற்சிதான் இது.

ஓ, இதுதான் காரணமா? இப்படிப் பேசியவர்களை அப்படியே அனுப்பலாமா?

என்ன செய்யப் போகிறீர்கள்?

இதோ சிறுவர் இதழில் வந்த படப்புதிர்கள். இவற்றுக்கு விடைகளைக் கண்டுபிடித்தால் அவையே பரிசாகக் கிடைக்கும்.



மகிழ்ச்சி

புதிர்களுக்கான விடையை நீங்களும் கண்டுபிடிக்கிறீர்களா?









கலந்துரையாடலாம்.



- உங்களுக்கான புத்தகங்களில் என்னென்ன இருக்கும்/ இருக்கலாம்?
- உங்களுக்குத் தெரிந்த சிறுவர் புத்தகங்கள் எவை?

செய்கை விளையாட்டு

- அணில்... அணில்... ஓடும் அணில் என்று சொல்வேன்; குடுகுடுவென ஓடுவேன்.
- முயல்... முயல்... தாவும் முயல் என்று சொல்வேன்; குதித்துக் குதித்துச் செல்வேன்.



செய்து பழகலாம்

1. பின்தொடர்ந்து படிக்க.



- பாடத்தைப் படிக்கக் கேட்டும் , ஒலிப்பதிவைக் கேட்டும் பின்தொடர்ந்து படிக்கலாம்.
- பாடத்தை ஒருவர் படிக்கத் தொடங்கி இடையில் நிறுத்த, ஒவ்வொருவராகத் தொடர்ந்து படிக்கலாம்.

FS9IW

2. கதையில் பிடித்த சொற்களை எழுதுக.



1			6
2			7
3			8
4			9
5			10



தாம் எழுதிய அதே சொற்களை அதிக எண்ணிக்கையில் எழுதியது யார் என்பதைக் குழுவினருடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

குறிப்பு

அதிகமான சொற்களை ஒன்றுபோல் எழுதிய நண்பர் :

ஒன்றுபோல் எழுதிய சொற்களின் எண்ணிக்கை :

3. பாடத்தில் அடிக்கோடிட்டு எழுதுக.



1. **'அவரை'** விடையாக வரும் புதிர் எது?

   _____

2. விலை என்ன? என்னும் தொடர் ஆறுமுறை இடம்பெற்றுள்ளது.

   சரி ☐ தவறு ☐

3. புதிர்கள் போடும் பறவை, விலங்கின் பெயர்கள் : _____

   _____

குறிப்பு

உரிய விடைகளைப் பாடத்தில் கண்டுபிடித்து அடிக்கோடிட வேண்டும்.

4. படித்துப் பார்க்க.



அறிந்து படிக்க.

விடை	–	பதில்
பழம்	–	கனி
புறப்பட்டன	–	கிளம்பின
அழைத்தது	–	கூப்பிட்டது
தருகிறேன்	–	கொடுக்கிறேன்
அனைவரிடமும்	–	எல்லோரிடமும்

பிரித்தும் சேர்த்தும் படிக்க.

கூடு + கட்டி	கூடுகட்டி
என்று + தான்	என்றுதான்
தாடி + வைத்த	தாடிவைத்த
தேன் + கூடு	தேன்கூடு

5. பேசலாம்.

நான் கேட்ட/ படித்த/
உருவாக்கிய புதிர்,
விடுகதைகள்





குறிப்பு

இதுவரை கேட்ட / படித்த / உருவாக்கிய புதிர்கள்/ விடுகதைகளைக் கூற வேண்டும்.

6. படித்து விடை எழுதுக.



படித்தல் பலகை

தாத்தா	குரங்கு	பாகற்காய்	எண்ணெய்
சிறுவர்	இருகரை	தாருங்கள்	கொடுத்தது
ஆடலாம்	கூடுகட்டி	பழக்கடை	வெங்காயம்
எழுதுகிறோம்	தேன்கூடு	படப்புதிர்கள்	புரியவில்லை

மாதம் ஒரு புதிய புத்தகம். இரண்டும் சந்தைக்குப் புறப்பட்டன.

1. நிரப்புக.

கூடு _____ , _____ கூடு

2. சொல்லுக்குள் சொல் உள்ள சொற்கள் - எ.கா. வெங்காயம்

_____ _____

_____ _____

3. படிப்பதுடன் தொடர்புடைய தொடர் எது?

_____

விரைந்து படிப்பேன்; வண்ணமிடுவேன்.



7. பாடச்சுருக்கம் – படிக்க: விடையளிக்க.



கேட்டது என்ன? தந்தது என்ன?

முயல், அணில், கரடி மூன்றும் நண்பர்கள்.
அவை புதிராகப் பேசத் தொடங்கின.
மயிலும் குரங்கும் காகம் வைத்திருந்த கடைக்குச் சென்றன.
அங்கும் புதிராகவே பேசின.
காரணம், புதிர்ப் புத்தகம் உருவாக்கத் திட்டமிட்டன.
அது சுட்டிகளுக்கான புத்தகம்.
அந்தப் புத்தகத்தின் பெயர் தேன்கூடு.
மாதம் ஒரு புத்தகம் கொடுக்க நினைத்தன.
புத்தகத்திற்குப் புதிர் எழுதவே அவ்வாறு பேசின.
அதைக் கேட்டு மயில், குரங்கு, காகம் மூன்றும் வியந்தன.
பரிசுகள் தந்தன; பாராட்டி மகிழ்ந்தன.

படிக்க எடுத்துக்கொண்ட நேரம்

1. ⏱ __ : __ 2. ⏱ __ : __ 3. ⏱ __ : __

குறிப்பு *விரைவாகப் படித்து, ஒவ்வொரு முறையும் படித்த நேரத்தைக் குறிக்க வேண்டும்.*

1. தேன்கூடு என்னும் புத்தகம்,
   - அ) வாரம் ஒருமுறை வெளிவரும். ☐
   - ஆ) மாதம் ஒருமுறை வெளிவரும். ☐
   - இ) நாள்தோறும் வெளிவரும். ☐
2. முயல், அணில், கரடி மூன்றும் எதற்காகப் புதிராகப் பேசின?

_____

8. சொல்வதை எழுதுக.



குறிப்பு *படித்தல் பலகையில் உள்ள சொற்கள், தொடர்களைச் சொல்லக்கேட்டு எழுத வேண்டும்.*

9. தொடரைப் படிக்க; விடையைக் கண்டுபிடித்து எழுதுக.



1. மலையில் உண்டு; அலையில் இல்லை. வாழையில் உண்டு; வாகையில் இல்லை.	ம ழை	மழை
2. நகையில் உண்டு; பகையில் இல்லை. வரியில் உண்டு; வழியில் இல்லை.		
3. மாலையில் உண்டு; காலையில் இல்லை. அன்பில் உண்டு; அம்பில் இல்லை.		
4. வீதியில் உண்டு; பாதியில் இல்லை. அடுப்பில் உண்டு; அழைப்பில் இல்லை.		

10. தொடர்ந்து எழுதுக.



யார் வீடு?

அதோ பார் வீடு
குருவி கட்டிய கூடு!
கூட்டுக்குள்ளே யாரு?
குருவிக்குஞ்சு பாரு!





அதோ பார் வீடு
புறா கட்டிய கூடு!
கூட்டுக்குள்ளே யாரு?
புறாக்குஞ்சு பாரு!



அதோ பார் வீடு
கழுகு கட்டிய கூடு!
கூட்டுக்குள்ளே யாரு?
கழுகுக்குஞ்சு பாரு!





11. கேட்டு விடை கூறுக.

"எல்லோரும் வாங்க! எல்லோரும் வாங்க!" என்று கத்திக்கொண்டே ஓடிவந்தது சிண்டு குரங்கு. அதன் குரல் கேட்டதும் காடே பரபரப்பானது. "என்னாச்சு?" என்று முயல், காதை நிமிர்த்தியது. மான்குட்டியின் வால் பயத்தில் நடுங்கியது. முள்ளம்பன்றி அப்படியே நின்றது. "அல்லிக் குளத்துல நம்ம எருமை அண்ணா..." என்று சிண்டு தடுமாறியது. எல்லா விலங்குகளும் வேகமாக அல்லிக் குளத்தை நோக்கி ஓடின. அங்கே எருமை அண்ணாவின் தலை மட்டும் தண்ணீருக்கு மேலே தெரிந்தது. "எருமை அண்ணா!" என்று அனைவரும் கத்தினர். அடுத்த நொடியில் எருமை அண்ணா எழுந்து, "யாருக்காவது ஆபத்தா?" என்று கேட்டது. அதைக் கேட்ட எல்லா விலங்குகளும் வயிறு குலுங்கச் சிரித்தன.

விலங்குகள் வயிறு குலுங்கச் சிரிக்கக் காரணம் என்ன?



12. சிந்தித்து விடையளிக்க.

குறிப்புகளுக்கு உரிய சொல் எது? நிழலிடுக.

எழுத்துகளுக்குள் ஓவியப்போட்டி நடந்தது. முதலிடத்தைப் பெற்றது உயிரெழுத்து. இரண்டாம் இடத்தைப் பெற்றது குறில் எழுத்து. மூன்றாம் இடத்தைப் பெற்றது நெடில் எழுத்து. நான்காம் இடத்தைப் பெற்றது மெய்யெழுத்து. நால்வரும் வரிசையாக நின்றனர். புதிய சொல் உருவானது. அந்தச் சொல் எந்தச் சொல்? நிழலிடுக.

அ) உருண்டை ○ ஆ) இளநீர் ○

இ) அன்னாசி ○ ஈ) ஔடதம் ○



13. படித்ததில் பிடித்தது. (கதைப்புத்தகம் / செய்தித்தாள்)

குறிப்பு

படித்த கதையின் தலைப்பு / கதை மாந்தர் / இடம் போன்றவற்றை எழுதலாம்.

14. படித்து விடை எழுதுக.



இரவு நேரம். அமுதன், "நிலாவின் வெளிச்சத்தில் சாப்பிடலாம்" என்றான். அவன் மாடியில் பாய் விரித்தான். அப்பாவும் அம்மாவும் உணவு, தண்ணீர், தட்டுகள், கரண்டிகள் எடுத்து வந்தனர். பாட்டி தட்டில் அப்பளம் தந்தார். அமுதன் எடுத்துக்கொண்டு மேலே வந்தான். அப்பளத் தட்டைக் கீழே வைத்தான். தட்டில் பாதி அப்பளங்களைக் காணவில்லை.

"அப்பளம் எங்கே?" என்றார் அப்பா.

"மாடி ஏறுவதற்குள் காணாமல் போனதா? எப்படி?" என்றார் அம்மா.

திருதிருவென விழித்தான் அமுதன்.

மாடி ஏறி வந்தார் பாட்டி.

"எடுத்தவர் யாரென எனக்குத் தெரியும்" என்றார்.

"யார் அது?" அனைவரும் கேட்டனர்.

"வேறு யார்? காற்றுதான்!" என்றார் பாட்டி. அனைவரும் சிரித்தனர்.

1. **அமுதன் குடும்பத்தினர் சாப்பிட எங்கே கூடினர்?**

   அ) மாடி ☐ ஆ) வாசல் ☐ இ) வீட்டின் அறை ☐

2. **சரியா? தவறா? நிழலிடுக.**

   வேலைகளை அனைவரும் பகிர்ந்து செய்தனர். சரி ◯ தவறு ◯

3. **அப்பளம் காணாமல் போனது எப்படி?**

_____

15. பின்பற்றி எழுதுக.



அணில் : என் நண்பர்களுடன் சேர்ந்து,

- புதிர், விடுகதை உருவாக்கிக் கேட்பேன்.
- புதிய புதிய கதையை உருவாக்கிச் சொல்வேன்.
- சிறுவர் புத்தகம் உருவாக்கப் படம் வரைவேன்.

_____

_____

_____

16. பேசலாம்; எழுதலாம்.



ஆகா, எத்தனை உள்ளன!
ஒன்று மட்டும் பறக்கிறது.

இவை அழகாக இருக்கின்றன.
துறுதுறு எனத் தாவுகின்றன.

சரியாக நிற்கிறோமா?
இல்லை, சற்று நகர்ந்தால் மான் தெரியும்.

குறிப்பு

படத்தை உற்றுநோக்கி வினாக்களை உருவாக்கி, நண்பர்களிடம் கேட்டு மகிழலாம்.



ஆகா, எத்தனை உள்ளன!

விலையும் குறைவுதான்.

சரியாக நிற்கிறோமா?

ஆம். அனைவரும் சிரியுங்கள்.

இவை அழகாக இருக்கின்றன.

நீரில் சுற்றி வருகின்றன.

குறிப்பு

உரையாடலைப் படித்து உரிய இடத்தில் எடுத்து எழுத வேண்டும்.

17. படைப்பு நேரம்.



அணில், கரடி, முயல் போன்று நீங்களும் புதிர்கள், விடுகதைகளை உருவாக்கிக் கூறுங்கள்.

எ.கா.



- ஊருக்கெல்லாம் ஒரே பந்தல்.
  இரவில் மட்டும் பூக்கும் பந்தல்.
- வெள்ளைக் கோட்டைக்குள் மஞ்சள் பந்து.
- இறக்கைகள் இருந்தும் பறக்காது.
  சுற்றிக் கொண்டே இருந்தும் நகராது.





18. சொல்லிப் பழகுக.

- மரத்தின் கிளையில் குரங்கு
  விரும்பி உண்ணுது கிழங்கு
- ஓடிந்த தட்டை சோளத்தட்டை
  காய்ந்த தட்டை கம்பந்தட்டை



19. செயல்திட்டம் – எங்கள் புத்தகம்.

- குழந்தைகள் படைப்பு நேரத்தில்/ பயிற்சிகளில் இதுவரை உருவாக்கிய புதிர்கள், விடுகதைகள், பாடல்கள், கதைகள், படங்கள் ஆகியவற்றைத் தொகுத்து, '**தேன்கூடு**' என்ற பெயரில் புத்தகம் ஒன்றை உருவாக்கச் செய்யலாம்.
- ஒவ்வொரு படைப்பின் கீழும் குழந்தைகளின் பெயர்கள் இடம்பெற வேண்டும்.



உருவாக்கிய புத்தகத்தைக் காலை வணக்கக் கூட்டம்/ பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் வெளியிடலாம்.

20. பகிர்வு நேரம்.



- பாடத்தில், பயிற்சிகளில் பிடித்தவற்றைப் பகிரலாம்.
- படித்த தகவல்கள்/கதை குறித்துப் பகிரலாம்.
- தான் தெரிந்துகொள்ள வேண்டும் என நினைப்பதைப் பற்றித் தயக்கமின்றி வினாக்கள் கேட்டுக் கலந்துரையாடலாம்.

21. சரியானவற்றை ✓ குறியிடுக. காரணம் கூறுக.

1. உங்கள் நண்பருக்குப் புதிரின் விடை தெரியவில்லை. நீங்கள் என்ன செய்வீர்கள்?

அ) கண்டுபிடிக்கட்டும் என்று விட்டுவிடுவேன். ☐

ஆ) விடையைச் சொல்லிவிடுவேன். ☐

இ) விடையைச் சிந்தித்துக் கண்டுபிடிக்க உதவுவேன். ☐

2. வகுப்பில் உங்களுக்கான புத்தகம் உருவாக்க எப்படிச் செயல்படலாம்?

அ) கூட்டாகச் செயல்பட வேண்டும். ☐

ஆ) ஒருவர் சொல்வதை மட்டுமே கேட்க வேண்டும். ☐

இ) தனித்துச் செயல்பட வேண்டும். ☐

குறிப்பு

விழுமியம் / வாழ்வியல் திறன்களைப் பெறுவதற்கேற்பக் கலந்துரையாட வேண்டும்.

கற்றல் பயணம்



அப்பா, பழம் வாங்கி வந்தார். மணியும் மாலாவும் ஆசையுடன் தின்றனர்.

அது என்ன பழம்? உங்களுக்குத் தெரிய வேண்டுமா?

படங்களுக்கான எழுத்துகளைச் சேர்த்தால் பழத்தின் பெயர் கிடைக்கும்.



முதல் எழுத்து



இரண்டாம் எழுத்து



மூன்றாம் எழுத்து

அவர்கள் தின்ற பழம் _____

நான் கற்றவை





1. புதிர்களைக் கேட்க, படிக்க, புரிந்துகொண்டு விடையளிக்க முடியும். ☐ ☆☆☆

2. தலைப்பு சார்ந்து பேச முடியும். ☐ ☆☆☆

3. சொற்கள், சிறு தொடர்களைச் சொல்லக்கேட்டு எழுத முடியும். ☐ ☆☆☆

குறிப்பு

கற்றுக்கொண்ட திறனுக்கு ✓ செய்ய வேண்டும்.
பெற்ற அடைவுக்கு ஏற்ப வண்ணமிட வேண்டும்.

4. நல்லவை அறிவோம்

RM8RZ

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்.





ஒருநாளும் படிக்காமல் இருக்கக் கூடாது.

ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.











உண்மையை அறியாமல் ஒருவர்மீது குற்றம் சுமத்தக்கூடாது.

நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்.









ஒருவர் தனக்குத் தெரிந்தே உண்மை இல்லாதவற்றைப் பேசக்கூடாது.

கலந்துரையாடலாம்.



- படக்கதைகளில் எனக்குப் பிடித்த கதை மாந்தர். ஏனெனில்...
- இன்று முதல் நான் மாற்றிக்கொள்ள விரும்புவது...

செய்து பழகலாம்

1. பின்தொடர்ந்து படிக்க.



- பாடத்தைப் படிக்கக் கேட்டும் , ஒலிப்பதிவைக் கேட்டும் பின்தொடர்ந்து படிக்கலாம்.
- பாடத்தை ஒருவர் படிக்கத் தொடங்கி இடையில் நிறுத்த, ஒவ்வொருவராகத் தொடர்ந்து படிக்கலாம்.

SJ3QZ

2. படித்துப் பார்க்க.



அறிந்து படிக்க.

ஓதாமல்	–	படிக்காமல்
பொல்லாங்கு	–	தீமை, குறை, குற்றம்
வருத்தம்	–	கவலை
பொய்	–	உண்மை அல்லாத
ஒருவரையும்	–	எவரையும்
நெஞ்சம்	–	மனம்

பிரித்தும் சேர்த்தும் படிக்க.

ஒரு + நாளும்	ஒருநாளும்
நான் + தான்	நான்தான்
பொய் + தன்னை	பொய்தன்னை
உதவி + கூட	உதவிகூட

3. பொருத்தமான வரியைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

- ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.
- ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்.
- நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்.











4. பொருத்துக.



ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்.	தெரிந்தே பொய் சொல்லக்கூடாது.
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.	படிக்காமல் இருக்கக் கூடாது.
நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்.	யார்மீதும் குற்றம் சுமத்தக் கூடாது.

5. பொருத்தமானதை ✓ குறியிடுக. காரணம் கூறுக.

1. பள்ளியில் வினாடிவினா போட்டி நடைபெறுகிறது.அதற்காக,

அ) நாள்தோறும் புதிய தகவல்களைத் தேடிப் படிப்பேன். ☐

ஆ) போட்டிக்கு முந்தைய நாள் மட்டும் படிப்பேன். ☐

இ) தெரிந்த வினாக்களுக்கு மட்டும் விடையளிப்பேன். ☐

2. தேர்வில், "என் விடைத்தாளைப் பார்த்து எழுது" என்று நண்பர் கூறுகிறார்.

அ) ஆசிரியர் பார்க்காதபோது மட்டும் பார்த்து எழுதுவேன். ☐

ஆ) எனக்குத் தெரிந்ததை எழுதுவேன். ☐

இ) முழுமையாக நண்பரின் விடையைப் பார்த்து எழுதுவேன். ☐

3. வகுப்பில், ஒரு மாணவர் விடை சொல்லும்போது தடுமாறுகிறார்.

அ) உனக்கு இதுகூடத் தெரியாதா? என்று கேட்பேன். ☐

ஆ) படிப்பதற்கு உதவுவேன். ☐

இ) ஆசிரியருக்குத் தெரியாமல் விடையைக் கூறி உதவுவேன். ☐

குறிப்பு

விழுமியம் / வாழ்வியல் திறன்களைப் பெறுவதற்கேற்பக் கலந்துரையாட வேண்டும்.

6. படித்துப் பார்க்க; படக்காட்சி குறித்துப் பேசுக.



படநிகழ்வுகளில் பொருத்தமான பெயர்களை எடுத்து எழுதுக.

- யார் உதவினார்?
- யார் தவறு செய்தார்?
- யாரைப் பாராட்டுவாய்?
- யாரிடம் "வேண்டாம்" என்று சொல்வாய்?
- யாரை நண்பராக்க விரும்புகிறாய்?
- யாருக்கு எடுத்துச்சொல்லிப் புரிய வைப்பாய்?
- யாரிடமிருந்து விலகுவாய்?

நான் கற்றவை



1. பாடல் வெளிப்படுத்தும் நற்பண்பை உணர்ந்து கலந்துரையாட முடியும். ☐
2. சூழலுக்கு ஏற்ற நற்பண்பைக் கண்டறிந்து வெளிப்படுத்த முடியும். ☐

குறிப்பு

கற்றுக்கொண்ட திறனுக்கு ✓ செய்ய வேண்டும்.
பெற்ற அடைவுக்கு ஏற்ப வண்ணமிட வேண்டும்.

திரும்பிப் பார்க்கலாம்



விடுபட்ட இரண்டு இடங்களிலும் ஒரே எழுத்தை நிரப்புங்கள்.

பா கு ப க

க ர க ம்

___ப்___

___ம்___ரம்

___ரங்___

WF8BY

மி பு ப தா

___த் ___

___லாப் ___ழம்

___ளிப் ___



எதை யார் வாங்கியது? எழுதுங்கள்.

பாட்டி : எந்த வண்ணம் பிடிக்கும்?

கோபி : வெள்ளை வண்ணம் பிடிக்கும்.

பாட்டி : இந்தா வாங்கிக்கொள்!

கோபி : ஐ, ஒளிந்து விளையாடுகிறதே!









அத்தை : எந்த வண்ணம் பிடிக்கும்?

மாலா : வெள்ளை வண்ணம் பிடிக்கும்.

அத்தை : இந்தா வாங்கிக்கொள்!

மாலா : ஐ, உருட்டி விளையாடுவேனே!



கோபி வாங்கியது _____. மாலா வாங்கியது _____.

கண்டுபிடித்து வண்ணமிடுங்கள்.





உரிய விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள்.



- மரத்தில் இருப்பது. மஞ்சள் சட்டை போட்டது. சுவையில் புளியோடு போட்டியிடுவது. அது என்ன? _____
- கரும்பிலிருந்து வந்தது; கட்டியாக இருப்பது; தண்ணீரில் குளித்தால் காணாமல் போவது. அது என்ன?_____
- எனக்கு நிறமில்லை; மணம் இல்லை; என்னை அள்ள முடியும். ஆனால், கிள்ள முடியாது. நான் யார்? _____

விடைகளைக் கொண்டு பத்தியை நிரப்புங்கள்.

குமார் கிண்ணத்தில் _____ பிழிந்தான். ரேவதி இரண்டு துண்டு _____ போட்டாள். இராபர்ட் _____ ஊற்றிக் கலக்கினான். மூவரும் குடித்து மகிழ்ந்தனர்.

தனி /சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு...



நானும் படிப்பேன்; வண்ணமிடுவேன்



ஞெ நெ னெ ரெ யெ லெ

ஙெ பெ கெ ளெ ழெ தெ

டெ வெ மெ ணெ செ றெ



நெய் செங்கல் எண்ணெய் வெள்ளெலி

பெயர் வெள்ளம் கட்டெறும்பு கெளுத்திமீன்

தெற்கு சுண்டெலி மெழுகுவத்தி நெல்லிக்காய்

மரம்

நெல்லி மரம்

பெரிய நெல்லி மரம்

காட்டில் பெரிய நெல்லி மரம்



செடி

செம்பருத்திச் செடி

சிறிய செம்பருத்திச் செடி

வீட்டில் சிறிய செம்பருத்திச் செடி



நெல் நெல் செந்நெல்.

செடி செடி சிறுசெடி.

தெரு தெரு தெற்குத்தெரு.

வெள்ளி வெள்ளி விடிவெள்ளி.



ஆற்றில் வெள்ளம் வந்தது.

வெந்தயம் வாங்கி வந்தாள்.

பெருக்கல் கணக்குச் செய்தான்.

நீரில் கெளுத்திமீன் துள்ளியது.











நானும் படிப்பேன்: வண்ணமிடுவேன்



வே	நே	ழே	ரே	யே	லே
றே	ளே	கே	பே	னே	தே
டே	ஞே	மே	ணே	சே	ஙே



மேடு	நேரம்	கேள்வி	தேன்சிட்டு
சேறு	சேமிப்பு	பேரிக்காய்	மேம்பாலம்
தேனீ	பேருந்து	தேங்காய்	கேழ்வரகு



சேவல்
கூவும் சேவல்
தெருவில் கூவும் சேவல்
மேற்குத் தெருவில் கூவும் சேவல்

மேகம்
கருத்த மேகம்
திரண்ட கருத்த மேகம்
வானில் திரண்ட கருத்த மேகம்



வேலி வேலி முள்வேலி.
நேரம் நேரம் பகல்நேரம்.
கேள் கேள் கேள்வி கேள்.
மேடு மேடு மணல்மேடு.



வானில் மேகம் திரண்டது.
பேருந்தில் பயணம் செய்தாள்.
கேழ்வரகுக் கூழ் குடிக்கலாம்.
ஒரு தேங்காய் வாங்கினேன்.









நானே செய்வேன்



1. கேட்டு விடை கூறுக.

வளவன் நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது, பொம்மை விற்கும் தாத்தா ஒருவர் அந்த வழியாக வந்தார். அவரிடம் வண்ணப் பொம்மைகள் இருந்தன. சிறுவர்கள் தாத்தாவைச் சூழ்ந்துகொண்டனர். சிறுவர்கள் சிலர், பொம்மை வாங்கினர். வளவன் எதுவும் வாங்கவில்லை. தாத்தா அங்கிருந்து புறப்பட்டார். அப்போது சிறிய மகிழுந்துப் பொம்மை கீழே கிடந்தது. தாத்தா தவறவிட்டிருந்தார்; யாரும் பார்க்கவில்லை. அந்த மகிழுந்து மிகவும் அழகாக இருந்தது. வளவன் அதை எடுத்தான். தானே வைத்துக்கொள்ளலாமா என்று நினைத்தான். சற்றுநேரம் எதையோ சிந்தித்தான். ஒரு முடிவுக்கு வந்தவுடன் தாத்தாவை நோக்கி ஓடினான்.

வளவன் என்ன முடிவு எடுத்திருப்பான்?

2. படித்துக்காட்டுக.



குறிப்பு

